| வா.மு.சே.கவிஅரசன் | மணியம் | வா.மு.சே.கவிஅரசன் |
| --- | --- | --- |
| அமெரிக்கா | சிங்கப்பூர் | அமெரிக்கா |
| **தலைவர் (பொறுப்பு)** | **செயலர் - இயக்குநர்** | **துணைத் தலைவர்** |

செய்தி வெளியீடு: 24 சூலை 2010

உத்தமம் பத்தாண்டுகள் நிறைவு சிறப்புச் செய்தி:

பேரன்பு நிறைந்த தமிழ்க் கணினி ஆர்வலர்களே, பெருமக்களே.

முத்தமிழ் அறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களின் நேரடிப் பார்வையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஓர் அங்கமாக மிகச் சிறப்பாக நடந்து முடிந்த ஒன்பதாவது தமிழ் இணைய மாநாட்டின் ஏற்பாட்டாளரான உத்தமம் (உலகத் தமிழ்த் தகவல்தொழில் நுட்ப மன்றம்) பத்தாண்டுகளை நிறைவு செய்துள்ளது என்ற மகிழ்வான செய்தியைத் தங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமைப் படுகிறேன்.

பத்தாண்டுகளாகப் பணியைத் தொடரும் இச்சிறப்பான வேளையில், உலகளாவிய அளவில் கணினி நுட்பத்தில் கருத்து மாறுபாடு கொண்ட நண்பர்களை இன்றளவிலும் ஒன்றிணைத்துச் செயல்படும் உத்தமத்திற்கு அடித்தளமாக விளங்கும் பொது மன்ற உறுப்பினர்களுக்கு செயற்குழு மற்றும் பொதுக்குழுவின் சார்பில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

பத்தாண்டுக் காலத்தில் முதல் முறையாக, உலகளாவிய அளவில் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுக்குழு, செயற்குழுவை வழி நடத்தும் தன் பணியைச் செவ்வனே செயல்படுத்தி வருவது உத்தமத்தின் பெருஞ்சிறப்புக்களில் ஒன்று.

செயலாற்றத் துடிக்கும் பெருமக்களைப் பெருவாரியாகக் கொண்டு செயற்குழுவும், பொறுப்பேற்கத் துடிக்கும் இளைஞர்களை பெருவாரியாகக் கொண்டு அமைந்திருக்கும் பொதுக்குழுவும் பத்தாவது ஆண்டில் உத்தமத்தின் மணிமகுடம்.

பணிக்குழுத்(Working Group) தலைவர்கள் - உறுப்பினர்கள் , முன்னாள் - இந்நாள் செயற்குழு உறுப்பினர்கள், இதுவரை நடந்து முடிந்த ஒன்பது தமிழ் இணைய மாநாடுகளின் பன்னாட்டுக் குழு, நிகழ்ச்சிகள் குழு, உள்ளூர்க்குழுத் தலைவர்கள் - உறுப்பினர்கள், தன்னார்வலர்கள் எனப் பல பொறுப்புக்களில் தங்கள் நேரத்தை உத்தமத்திற்கு அழைக்காமலேயே அளித்த பெருமக்களுக்கு நன்றி கூறி உத்தமம் தனது பத்தாவது ஆண்டில் அவர்களின் பெரும் பணிகளை நினைவில் நிறுத்தி மகிழ்கிறது.

உத்தமத்தின் மின்னிதழ் மின்மஞ்சரியின் ஆசிரியர்களாகப் பணியாற்றிய மாலன், நா. கண்ணன் அவர்களையும் உத்தமம் நன்றியுடன் நினைவில் நிறுத்துகிறது.

சென்ற ஆண்டுகளில் சிறப்புடன் செயலாற்றிய செயலர்-இயக்குநர்கள் அருண் மகிழ்நன்(2000-2007), மணியம் (2010 சனவரி முதல் இன்று வரை) , உதவியாளர்கள் நாரா, அருணா, சாந்தி சீர்மிகு உத்தமத்தின் படிக்கற்கள். நன்றி செயலர் - இயக்குநர்களே, இயக்குநரக உதவியாளர்களே.

தலைகளைத் தடையாக எண்ணித் தகுதியற்ற விமர்சனங்கள் பல எழுந்த போதிலும் தளராது தங்கள் தலைமைப் பணியை வெகு சிறப்பாக ஆற்றிய எம் முதல் தலைவர் ஆணந்தகிருட்டிணன்(2000-2003) முதல் கடைத் தலைவர் வெங்கடரங்கன்(சனவரி2010-சூலை2010) வரை இடையராது உழைத்து, பத்தாவது வருடத்தில் மிகப்பெரும் இணைய மாநாடு நடத்தி முடித்திருப்பது தமிழ்க் கணினி ஆர்வலருக்கு உத்தமத்தின் இவ்வருடக் காணிக்கை.

உத்தமத்தை உயிர்ப்பிக்கப் பெரும் வழிகாட்டியாக இருந்தவர் தலைவர் கல்யாண்(2007-2009). 2003 முதல் 2007 வரை தலைவர் பொறுப்பிலிருந்து உத்தமத்தை வழிநடத்தியவர் முத்து. கல்யாண்-முத்து இருவரையும் தனது பத்தாவது ஆண்டில் உத்தமம் பாராட்டி மகிழ்கிறது.

2009ல் நூறு உறுப்பினர் எண்ணிக்கையை முதல் முறையாகக் கடந்த உத்தமம், இன்று 140 உறுப்பினர்களுடன் ஏறு முகமாகவே உள்ளது. விரைவில் 1000ம் உறுப்பினர்களாக தங்களின் உதவியை உத்தமம் எதிர் நோக்கியுள்ளது.

பல கருத்து வேறுபாடுகளுக்கு இடையிலும் உத்தமத்துடன் இணைந்து பணிபுரிய ஆர்வமுடன் மீண்டும் இணைந்த திரு. பொன்னவைக்கோ (2003 மாநாட்டு உள்ளூர்க்குழுத் தலைவர்), திரு. மணி மணிவண்ணன் (2002 மாநாட்டு உள்ளூர்க்குழுத் தலைவர்), பேராசிரியர்.செல்வகுமார் அவர்களை உத்தமம் வணக்கத்துடன் வரவேற்கிறது.

கருத்து மாறுபாடுகளினால் சில வேளைகளில் கடிந்துரைக்கப்பட்டாலும் எமது வேண்டுகோளை ஏற்று தமிழ்க் கணினி மேம்பாட்டை மட்டும் முன் நிறுத்தி, நம்முடன் தொடர்ந்து செயல்படும் திரு. வெற்றிப்பாண்டியன்(வாசிங்டன், அமெரிக்கா- செயலர் அமெரிக்கக் கிளை 2008-2009), திரு. நாக. கணேசன்(டெக்சாஸ், அமெரிக்கா, தலைவர் அமெரிக்கக் கிளை 2008-2009), இரமணி (ஒகயோ, அமெரிக்கா), செயற்குழு உறுப்பினர்கள் திரு. ஆண்டோ பீட்டர், திரு முகுந்த்(ஆசுதிரேலியா), திரு. மயூரன் (இலங்கை), திரு. சிவா பிள்ளை(இலண்டன்), திரு இளந்தமிழ்(மலேசியா), உறுப்பினர்கள் திரு சிறிவாசு, திரு ஜெயதீபன், திரு தவா , திரு. அனுராஜ் (கனடா), திரு. திரு. கலைமணி(சிங்கை) மற்றும் ஏனைய உத்தம உறுப்பினர்கள், ஆர்வலர்கள், நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி!!!!

உத்தமம் என்ற நிறுவனம் பத்து வருடங்களாகத் தொடர்வது தமிழ்க் கணினி ஆர்வலர்கள் தன்னலமில்லாது தமிழ்க் கணிணிக்காக இணைந்து செயல்படுவது என்ற தங்கள் முடிவு மட்டுமே என்றால் அது மிகையாகாது.

"**<u>பிறர் மனம் பிறழா வண்ணம் கலந்துரையாடிக் கருத்துரையாடுதல்</u>**" என்பதைத் தன் முக்கியக் கொள்கையாகக் கொண்டுள்ள உத்தமம், தன் பணியை மேலும் தமிழ்க் கணினிப் பணிகளுக்குத் தொடர தங்களின் பேராதரவை எதிர்நோக்கியுள்ளது.

உத்தமத்தை அடுத்த பத்தாண்டுகளுக்கு வழிநடத்தும் பெருமக்கள் கொண்ட சிறப்பு மிக்க பொது மன்றத்தில் இணைந்து பணியாற்றி பல பத்தாண்டுகளைக் கடக்க தமிழ்க் கணினி ஆர்வலர்களை உத்தமம் அன்போடு வரவேற்கிறது.

அன்புடன்
கவிஅரசன் வா.மு.சே.
துணைத்தலைவர்- உத்தமம்
சூலை 24, 2010.

மேல் விவரங்களுக்கு, தங்கள் பகுதியின் உத்தமம் செய்தித் தொடர்பாளர்களை அன்பு கூர்ந்து தொடரபு கொள்ளுங்கள்:

| | | |
| --- | --- | --- |
| Singapore | S. Maniam | maniam@infitt.org |
| India | Anto Peter | antopeter@infitt.org |
| Malaysia | ElanTamil | elantamil@infitt.org |
| SriLanka | Mauran M | mauran@infitt.org |
| Europe | Siva Pillai | sivapillai@infitt.org |
| Australia | MungthRaj Subramaniam | mugunth@infitt.org |
| Americas | Kaviarasan Va.Mu.Se. | kavi@infitt.org |

இணைப்பு -1 :

தலைவர்

முனைவர் ஆணந்தகிருட்டிணன் சென்னை ( 2000- 2003 ) - 3 வருடங்கள்
முத்து நெடுமாறன் மலேசியா ( 2003-2007) - 4 வருடங்கள்
கல்யாணசுந்தரம் சுவிட்சர்லாந்து (2007-2009) - 3 வருடங்கள்
தி.ந.ச.வெங்கடரங்கன் சென்னை ( சனவரி- சூலை, 2010) - 7 மாதங்கள்

தலைவர் (பொறுப்பு) :
கவிஅரசன் வா.மு.சே. அமெரிக்கா (சூலை 2010 முதல்.....)

துணைத் தலைவர்

முத்து நெடுமாறன், மலேசியா (2000-2003) -3 வருடங்கள்.
கல்யாணசுந்தரம், சுவிட்சர்லாந்து (2003-2007) - 4 வருடங்கள்
தி.ந.ச.வெங்கடரங்கன்,சென்னை (2007-2009) - 3வருடங்கள்
கவிஅரசன் வா.மு.சே., அமெரிக்கா (சனவரி 2010 முதல்.....)

இயக்குநர்

அருண்மகிழ்நன்,சிங்கை (2000-2007) 7 வருடங்கள்
கவிஅரசன் வா.மு.சே., அமெரிக்கா (2008-2009) 2 வருடங்கள்
மணியம்,சிங்கை(2010 சனவரி முதல்.......)